Judicial Form No.53

See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 771/2022 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | ரமணி |
| Father's Name | – | க/பெ. ராஜேந்திரன் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Calling | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 07th August 2026

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused present. Accused counsel present.

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருச்சி மாவட்டத்தில் குடியிருந்து கொண்டு வீட்டு வேலை செய்து வருகிறேன். கடந்த 09.11.2017 அன்று என் கணவர் ராஜேந்திரன் அன்றைய தினம் காமநாயக்கன்பாளையம் அருகில் பிட்டராக ஒரு மில்லில் வேலை செய்து கொண்டிருந்தார். இரவு 08.45 மணிக்கு என் கணவர் வேலையை முடித்துவிட்டு காமநாயக்கன்பாளையம் நால்ரோட்டிற்கு டீக்குடிப்பதற்காக நடந்து கொண்டு அவருடன் வேலை செய்து வரும் பசங்களுடன் சென்று கொண்டிருந்தார் என்றும், அப்போது பேருந்து ஒன்று அவருக்கு பின்னால் வந்து இடித்துவிட்டதாக சந்திரசேகர் என்பவர் எனக்கு தொலைபேசி மூலம் தகவல் கூறினார்.

நான் கிளம்பி பல்லடம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அங்கு வரும் வழியில் என் கணவர் இறந்துவிட்டதாக கூறி எனது கணவரின் பிரேத்தினை சவக்கிடங்கில் வைத்திருந்தார்கள். நான் மறுநாள் 10.11.2017 அன்று நெகமம் காவல்நியைத்தில் இச்சம்பவம் குறித்து புகார் அளித்தேன். புகாரை நான்தான் எழுதினேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா.ஆ.1 ஆகும். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் ஊரிலிருந்து எப்போது சம்பவத்தன்று கிளம்பினேன் என்றால் இரவு 09.30 மணியளவில் கிளம்பினேன். எனக்கு தகவல் கிடைத்த பிறகு நேரடியாக நான் பல்லடம் அரசு மருத்துவமனைக்குதான் சென்றேன் என்றால் சரிதான். நான் பல்லடம் மருத்துவமனைக்கு வரும்போது எவ்வளவு நேரம் இருக்கும் என்றால் இரவு 1 மணி இருக்கும். நான் அரசு மருத்துவமனைக்கு வரும்போது போலிசார் இருந்தார்களா என்றால் இருந்தார்கள்.

என்னிடம் நான்தான் இறந்த நபரின் மனைவியா என்று கேட்டார்களா என்றால் கேட்டார்கள்.

என்னிடம் விவரம் எல்லாம் கேட்டு எழுதிக் கொண்டு, கையெழுத்து வாங்கிவிட்டார்கள் என்றால் சரிதான். அந்த கையெழுத்துதான் தற்போது புகாரில் குறியீடு செய்யப்பட்ட கையெழுத்து என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** - இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Tmt. B. Salma BA.,BL.,(Hons.))**

Judicial Magistrate No. II,
Pollachi.